
மாருதி துணை.

1930-வருஷம் அர்ப்பசி மாதம்
மழையினால் வந்த
ரயில்வே பாலம் உடைந்த அபாய,

வெள்ளச் சிந்து.



கும்பகோணம் பாணாதுரை பத்துக்கட்டுத்தெரு, பாகவதர்,
ஜெகனாதபிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி

கும்பகோணம் பாணாதுரை பாலகவி
K. குருஸாமிதாஸ் அவர்களால்,

இயற்றப்பட்டது.

கும்பகோணம் சுதேசி பிரஸில் அச்சிடப்பட்டது.

இதன் விலை) (ரிஜிஸ்டர்) (6 பைசா

உ

மாருதி துணை.





வெள்ளச் சிந்து.

விநாயகர் வெண்பா.

பொல்லாமழை பொழிந்து பூதலத்தில் நீர் பிரள
சொல்லமுடியாமல் சோர்ந்து ஜனம் மிரள
வெள்ளத்தின்சிந்துஎன்று விவரித்துநான் அருள் என்
உள்ளம்மலர் தொடுத்தேன் உச்சிவிநாயகர் காப்பு.

கையரவிலாது நடுகண்புநவ பூட்டு என்ற மெட்டு

1 ஆயிரத்து தொளாயிரமாம் ஆண்டுமுப்பதில் பாரு
அர்ப்பியமாதத்திலே வெள்ளம் வந்த ஜோரு

2 குருஸாமிதாஸனவர் கூறிவரும் பாட்டு
ஒருமாதம் மழையினாலே உலகத்திற்கே சீட்டு

3 கெடுத்ததய்யா மழையும் வந்து ஏழைகுடிகள் பாப்பர்
எடுத்துப்போட வாங்கிநேனே ரெண்டுமாதபேப்பர்

4 மண்ணுபோன வெண்ணூரு மத்தியிலே உடைப்பு
எண்ணுதவீடுகளும் எல்லாரும் அடைப்பு

5 இரும்புதலைகிராமத்தையே இழுத்ததுபோல்லாச்சு
குருவைநெல்லு பயிர்கள் எல்லாம் அருவையில்லாபோச்சு

வெள்ளச் சிந்து.

6 தடமில்லாமல் ஜனங்களெல்லாம் தவிக்கும்காலம்கண்டு
படவுதனில் அதிகாரிகள் பாதுகாத்தார் நின்று

7 அவ்வசரமாய் அரத்தவர்கள் அவுலுஇடிக்கலாச்சு
ஆவதும்அழிவதும் அரன்செயலேபேச்சு

8 சர்க்காருவேலைக்குமே சம்பளம் கொண்டாட்டம்
சாகுபடி செய்தவற்கு சோத்துக்கு திண்டாட்டம்

9 அர்ப்பியமாதத்திலே ஆறு வெள்ளம் ஓங்க
சர்வீசுகாருயெல்லாம் செட்டுகளில் தூங்க

10 படபடன்று பிரண்டுதய்யா குடமுருட்டியாறு
சடசடன்று விழுந்ததய்யா ராஜகிரியில் பாரு

11 தஞ்சாவூரு சோளகம்பட்டி லயனில் உடைப்பாக
புஞ்சாய் பரக்குரார்கள் பாசஞ்சர்கள் போக

12 அய்யம்பேட்டை மாயவரம் அந்தமட்டும் ரயிலே
பையவே உடைப்படைத்தால் பஸ்ட்டாபோகும் மெயிலே

13 பட்டீஸ்வரம் கோவிந்தகுடியில் பரிதாபம் பாரு
எட்டிபார்க்க இழுக்கிறதாம் திருமலையான் ஆறு

N, Annamalai, Koottaiyur



வெள்ளச் சிந்து.

14 வலங்கியானும் ஆலங்குடியும் வந்தவெள்ளம் மேக
கலநெல்லுக்கு வழியில்லாமல் குருவை பயிர் போக

15 கோரையாறு உடப்பினாலே நீடாமங்கலம் கஷ்டம்
சாரைபோலே பிரண்டதய்யா ஜாஸ்தி நஷ்டம்

16 நன்னிலம் விற்குடிக்கும் லயன் உடைப்பு மோசம்
கண்ணார பார்ப்பதற்கே வீடும் ஆடும் நாசம்

17 ஆயிரம்போர்பழையவைக்கோல்- அடித்துக்கொண்டுபோச்சு
வாயில்லா ஜீவனுக்கு மண் விழுந்து போச்சு

18 கொரடாச்சேரி ரைஸ்மில்லில் கோபுரம்போல் வெள்ளம்
கொரங்குசம்பா அரிசிமூட்டை ஆயிரம்மேல் சேதம்

19 திருச்சியிலே பெரும்மழையால் வீடுகளும் சேதம்
ஆருகிட்டே இருப்பதினால் ஊருகளில் மோதும்

20 ஒட்டு வீடு மழையினாலே நழுகிவிழுகலாச்சு
நாட்டுபுரத்துவீட்டுக்கெல்லாம் சீட்டுகிழிந்துபோச்சு

21 சீரங்கம் சைடுதன்னில் சிதரி வீடு விழுக
சிரம்பட்டு ஆயிரக்கால் மண்டவத்தில் இருக்க

வெள்ளச் சிந்து.

22 கருவூரு திருச்சிக்குமே நடுவில் வெள்ளம் ஓங்க
துருவாய்போன வண்டியெல்லாம் தூரத்திலே தூங்க

23 மணவாரி ஈரோடு மாயனூரு உடைப்பு
க்ஷணத்துக்குள்ளே தந்திமரம் பாலமெல்லாம் மடுப்பு

24 சத்தியமங்களம் பவானியாற்றில்-சார்ந்ததேவெள்ளோட்டம்
நத்தி அருகில் வாழ்ந்தவரும் நாலடி ஓட்டம்

25 கடினமானமழையும் வெள்ளம் குண்ணூர்தனிலே நாட
வெடிமருந்து சாலையெல்லாம் ஜலத்திலே பிரண்டோட

26 மேட்டுப்பாளையம் ரோட்டுகளிலே மலையும் இடிந்துவிழுக
ரோட்டில்போன வண்டிக்காரர் வழியில்லாமல் அழுக

27 குன்னூரில் மழையும் பெஷலும் கூடிவந்த தோஷம்
சொன்னேனே பாலம்ரெண்டு வெள்ளத்தாலே நாசம்

28 மைசூரு அணைக்கட்டுக்கு மேலே வெள்ளம் ஓங்க
சைசுடனே தள்ளிவிட்டார் தாங்காமலே ஏங்க

29 நெல்லூரு ஜில்லாவிலே பெண்ணையாரு ஓட
கல்வீடும் ஆடுமாடும் அடித்துக்கொண்டு நாட

வெள்ளச் சிந்து.

30 எம் எஸ் எம் பாதையிலே ஏக வெள்ளம் மூட
மும்மரமாய் கல்க்கற்றுவின் லயனில் அடித்து ஓட

31 ஆடு மாடு வீடு மனிதர் ஆருகளிலே போக
பாடுபட்டு கொல்லுராளே பரமசிவம் நோக

32 கண்ணாரபார்ப்பதற்கே கல்லு மனது பதரும்
சொன்னாலே கேழ்ப்பதற்கே செவிகளுமே வெதரும்

33 சர்க்காரு அதிகாரிகள் சரீரகஷ்டப்பட்டார்
காப்பாற்றுவேன் என்றுரைத்து ஆற்றி ஓடம் விட்டார்

34 என்னாலியன்ற மட்டும் எழுதினேனேமெய்யா
பின்னையும் உரையுரனே இருந்து கேளுமய்யா

35 நாட்டுகளை நஷ்டம்செய்த வெள்ளச்சிந்து பாட்டு
பாட்டைகேட்டு பைசா ஆறு பாலனிடம் நீட்டு

தங்கம் தில்லாலே என்ற மெட்டு.

1 கள்ளனேபோலவுமே களவாங்க வந்தய்யா
பொல்லாத பாழும் வெள்ளம் வெள்ளபெருமையே
நில்லாத வந்ததைகேள் சொல்லவருமையே

வெள்ளச் சிந்து.

2 ஆயாடி இந்த மழை அழும்புசெய்ய வந்ததடி
ஓயாமழையினாலே வெள்ளபெருமையே
உலகமெல்லாம் வந்ததடி சொல்லவருமையே

3 வேனமழையாலே வெகு குடிகள் இழந்தார்
மானம்பார்த்த சீமை எல்லாம் வெள்ளபெருமையே
காணப்பயம் ஆகுதய்யா சொல்ல வருமையே

4 அய்யம்பேட்டை ராஜகிரி ஆவூரு வெத்திலையும்
கோவிந்தகுடி கொடிக்காலும் வெள்ளபெருமையே
அவித்திகழி இல்லையேதான் சொல்லபெருமையே

5 நாகூரு பாட்டையிலே நாலுஅடி தண்ணீ
நாகைபட்ணம் ரோட்டுலேயும் வெள்ளபெருமையே
நல்லமீன் பிடித்தார்களாம் சொல்லவருமையே

6 திருக்கோயிலூர்ஸ்டேஷனுக்கு திடீரனவே போனஜனம்
இருபத்திரெண்டுபேரை வெள்ளபெருமையே
இழுத்துபோனபெண்ணையாராம் சொல்லவருமையே

7 ஆரணிஆர்க்காடு கூடலூர் பண்ணுருட்டி
பாரநிலக்கடலை வெள்ளபெருமையே
பதராகபோனதடி சொல்லவருமையே

8 கொள்ளடம் கரைபுரள கெடிலம் லயன்புரள
பள்ளத்தில் இருப்பவர்கள் வெள்ளபெருமையே
பார்த்து பார்த்து மங்குறார்கள் சொல்லவருமையே

9 பஞ்சிபட்டி ஏரியாலே பாரும் குழித்தலையே
அஞ்சிநூருவீடுகளும் வெள்ளபெருமையே
பஞ்சாய்பாரந்ததுபார் சொல்லவருமையே

வெள்ளச் சிந்து.

10 கண்ணே சுரக்காய்பட்டி | பெண்ணே நுலைஞ்சிபோச்சு
எண்பதுகுடிசைகளும் | வெள்ளபெருமையே
ஒண்ணும்தெரியலையே | சொல்லவருமையே

11 பிள்ளைபாளையமெல்லாம் | அள்ளிமண்ணைபோட்டதய்யா
கள்ளக்கிருமத்தோட | வெள்ளபெருமையே
கருப்பத்தூருபோனதய்யா | சொல்லவருமையே

12 ஆறுகளில்வெள்ளம்வர | அசாரமழைபொழிய
திருப்பாபுலியூரிலே | வெள்ளபெருமையே
கடை தீ பற்றினசேதியைகேள் | சொல்லவருமையே

13 பொய்கை வடவாறு | காவேரி வெள்ளாறு
மாமுண்டி ஆரில்கூட | வெள்ளபெருமையே
மளமளன்று பொங்குதே தான் | சொல்லவருமையே

14 வேலிபோல வந்ததய்யா | வெள்ளம் திருச்சியிலே
போலீஸ்லயன்தனிலே | வெள்ளபெருமையே
போய்புகுந்தார் சத்திரமே கேள் | சொல்லவருமையே

15 ஊரைகுடிகெடுக்க | ஊமைவெள்ளம்வந்ததய்யா
உரையூரு அக்கிரஹாரத்தில் | வெள்ளபெருமையே
தேரையைபோல்முழிக்கிறார்கள் | சொல்லவருமையே

16 நட்டபயிர்களுடன் | நாட்டுகடலையெல்லாம்
எடங்கண்ணியில்போனதடி | வெள்ளபெருமையே
அடமாக அழிந்ததடி | சொல்லவருமையே

17 எந்தவருஷத்திலும் | இந்தமழைகண்டதுண்டோ
இந்தவருஷத்திலே | வெள்ளபெருமையே
ஏடேற்றவந்ததடி | சொல்லவருமையே

வெள்ளச் சிந்து.

18 பாலன் குருஸாமி	பாட்டுகளில் தங்கம்
சாலபுவிதனிலே	வெள்ளபெருமையே
சாற்றினேனே இந்த மட்டும்	சொல்லவருமையே

பேயாமழைபேஞ்சுகிச்சு பெரியவெள்ளம் வந்துகிச்சு என்ற மெட்டு

நாத்தகொல்லைகத்திரிக்கா
ஊத்தகொல்லைகத்திரிக்கா
உடப்பெடுத்த கத்திரிக்கா
திடம்பெருத்த கத்திரிக்கா
அடிபெருத்த கத்திரிக்கா
தடிக்கிவிட்ட கத்திரிக்கா
வெள்ளத்து கத்திரிக்கா
சொள்ளகொண்ட கத்திரிக்கா
தலையில்லாத கத்திரிக்கா
விலையில்லாத கத்திரிக்கா
உப்புவாங்காத கத்திரிக்கா
பருப்புவாங்காத கத்திரிக்கா
காரமில்லா கத்திரிக்கா
சாரமில்லா கத்திரிக்கா
வம்புக்காரன் கத்திரிக்கா
காம்புபெருத்த கத்திரிக்கா
அரக்குமுன்னே கத்திரிக்கா
மரத்துக்குமே கத்திரிக்கா
பேருபோன கத்திரிக்கா
ஜோருபோன கத்திரிக்கா
இவ்வருஷம் கத்திரிக்கா
பவரில்லாத கத்திரிக்கா
நல்லநல்ல கத்திரிக்கா
காளைவரும் கத்திரிக்கா

முற்றிற்று

கும்பகோணம் பாணாதுரை
பாலகவி K. குருஸாமி தாஸ் அவர்கள்
இயற்றிய புஸ்தகங்களின்
விளம்பரம்.

சிங்கார தங்கச்சிந்து	0	0	6
ஷை இரண்டாம் பாகம்	0	0	6
ஜப்பான் ஒப்பாரி	0	0	6
குருநாதன் மாலை	0	0	6
மாரியம்மன் சிந்து	0	0	6
கலியுக பெருமாள் சிந்து	0	0	6
தங்கந்தில்லாலே	0	0	6
மன்மதன் ஒப்பாரி	0	0	6
சாரதா சட்டம்	0	0	6
ஏரோபிளான் பாட்டு	0	0	6
வெள்ளச்சிந்து	0	0	6
மூக்கரந்த பாட்டு	0	0	6
பட்டுச்சேலை பாட்டு	0	0	3
முருகன் சிந்து	0	0	3
திருவண்ணாமலையார் தீபச் சிந்து	0	0	3

இவைகளை கீழ்க்கண்டவர்களிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு மொத்தமாயும், சில்லரையாயும் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் நேரிலும், லெட்டர் மூலமாயும் தெரிந்துகொள்ளலாம்.

கும்பகோணம் பாலகவி, K. குருசாமி தாஸ் அவர்களால் இயற்றிய புஸ்தகத்தை அனுமதியில்லாமல் அச்சியில் இடுவோர்கள் இதனால் வரும் நஷ்டத்தை கவர்மெண்ட் சட்டப்படி குற்றத்துக்குள்ளாவார்கள்.

பாலகவி K. குருஸாமி தாஸ்,

பாணாதுரைபத்துக்கட்டுத்தெரு

கும்பகோணம்.